# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி
## மதிப்பீட்டுத் தாள் 2023 – 2024
## வளர்தமிழ் 12

TEDC

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்
மொத்தப்புள்ளிகள் : 100

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

TEDC

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. ஆரியர் இந்தியத் துணைக்கண்டத்தினுள் நுழைந்தபோது அங்கு வாழ்ந்த இனம்

அ) சிங்களவர் ☐ ஆ) தமிழர் ☐
இ) பறங்கியர் ☐ ஈ) களப்பிரர் ☐

2. தமிழ் ____________ மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது.

அ) சீன ☐ ஆ) சுமேரிய ☐
இ) திராவிட ☐ ஈ) இந்தோஆரிய ☐

3. உவமையணிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) கடலறிவு ☐ ஆ) நெஞ்சக்கல் ☐
இ) விழிக்கயல் ☐ ஈ) தமிழ்த்தேன் ☐

4. நாற்காலி, மூக்குத்தி என்பன

அ) இடுகுறிப்பெயர் ☐ ஆ) காரணப்பெயர் ☐
இ) பொதுப்பெயர் ☐ ஈ) சிறப்புப்பெயர் ☐

5. மீனாட்சி என அழைக்கப்படுபவர்

அ) திருமகள் ☐ ஆ) கலைவாணி ☐
இ) அழகர் ☐ ஈ) அங்கயற்கண்ணி ☐

TEDC

6. தன் இனத்தைத் தானே காட்டிக் கொடுப்பவன்

அ) நண்பன் ☐ ஆ) வீரன் ☐
இ) இரண்டகன் ☐ ஈ) பகைவன் ☐

7. பிறவினை விகுதியைக் குறிக்கும் எழுத்துகள்

அ) கி,சி ☐ ஆ) மி,தி ☐

இ) தி,டி ☐ ஈ) வி,பி ☐

8. பாவம்! இந்தச் சிறுமி பல நாட்களாக உண்ணவில்லையே. இச் சொல்லியம்

அ) மெய்ப்பாட்டுச் சொல்லியம் ☐ ஆ) ஏவற் சொல்லியம் ☐

இ) வினாச் சொல்லியம் ☐ ஈ) தொடர்ச் சொல்லியம் ☐

9. யகரமெய் எழுத்துத் தோன்றும் புணர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) பூ + அரும்பு ☐ ஆ) கோ + அழகு ☐

இ) நீ + இல்லை ☐ ஈ) பலா + இலை ☐

10. கருவி,கருத்தா, உடனிகழ்ச்சிப் பொருளில் வரும் வேற்றுமை

அ) 3 ஆம் வேற்றுமை ☐ ஆ) 6 ஆம் வேற்றுமை ☐

இ) 4 ஆம் வேற்றுமை ☐ ஈ) 5 ஆம் வேற்றுமை ☐

11. பசும்பொன்னைக் கூத்தருக்கு வழங்கிக் கடலாடுவிழா எடுத்த மன்னன்

அ) நெடுஞ்செழியன் ☐ ஆ) குமணன் ☐

இ) நெடியோன் ☐ ஈ) பாரி ☐

TEDC

12. "குறுந்தொடி களைந்தகை சரபம் ஏந்தி
நெடுந்தேர்க் கொடிஞ்சி பொலிய நின்றோன்" இப்பாடல் அடியில் குறுந்தொடி என்பது

அ) குண்டலம் ☐ ஆ) சலங்கை ☐

இ) சிலம்பு ☐ ஈ) சிறுவளையல் ☐

13. வானம் கறுத்து இடி இடித்துச் சோவென மழை பொழிந்தது. ____________

உழவர் விதைப்புக்கு அணியம் செய்கின்றனர்.

அ) ஏனெனில் ☐ ஆ) அதனால் ☐

இ) ஆனால் ☐ ஈ) ஏனென்றால் ☐

14. கொண்டல் காற்று வீசும் திசை

அ) வடக்கு ☐ ஆ) தெற்கு ☐

இ) மேற்கு ☐ ஈ) கிழக்கு ☐

15. பெரும்பொழுதுகளில் இடம்பெறாதது

அ) முன்பனி ☐ ஆ) இளவேனில் ☐

இ) வைகறை ☐ ஈ) கூதிர் ☐

16. வில் வளைத்தான். என்பது

அ) ஐந்தாம் வேற்றுமைத் தொகை ☐

ஆ) ஏழாம் வேற்றுமைத்தொகை ☐

இ) நான்காம் வேற்றுமைத்தொகை ☐

ஈ) இரண்டாம் வேற்றுமைத்தொகை ☐

17. புலவன் தான் காணும் காட்சியைத் தன் கற்பனைத் திறனுடன் இணைத்துச் சொல்வது

அ) உயர்வுநவிற்சிஅணி ☐ ஆ) உவமைஅணி ☐

இ) உருவகஅணி ☐ ஈ) தற்குறிப்பேற்றஅணி ☐

TEDC

18. கற்றலும் கற்பித்தலும் முற்றுமுழுதாகப் பிராமணரிடம் சென்ற நூற்றாண்டு

அ) 7 ஆம் நூற்றாண்டு ☐ ஆ) 8 ஆம் நூற்றாண்டு ☐

இ) 9 ஆம் நூற்றாண்டு ☐ ஈ) 10 ஆம் நூற்றாண்டு ☐

19. குமரிமுனை தொடக்கம் இமயம் வரையுள்ள பகுதியின் அன்றைய பெயர்

அ) நயினாதீவு ஆ) மாலைதீவு

இ) நாவலந்தீவு ஈ) கச்சதீவு

20. மெய்முன்மெய் புணர்தலுக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) பட்டாடை ஆ) தமிழ்க்கழகம்

இ) வாழையிலை ஈ) கணிப்பொறி

21. தொண்டைமான் ———————— மாநகரை ஆண்டு வந்தான்.

அ) காஞ்சி ஆ) தகடூர்

இ) வேலூர் ஈ) புகார்

22. துன்பத்தால் மனமுருகுதல் என்ற கருத்தை விளக்கும் உவமைத் தொடர்

அ) அனலில் இட்ட மெழுகு போல ஆ) காட்டுத் தீ போல

இ) ஊமை கண்ட கனவு போல ஈ) அத்தி பூத்தாற் போல

23. பகுசொல்லின் இறுதியில் வரும் உறுப்பு

அ) இடைநிலை ஆ) பகுதி

இ) விகுதி ஈ) சந்தி

TEDC

24. "கோதை மாதவி கொழுங்கொடி எடுப்ப" என்ற பாடல் இடம்பெற்ற நூல்

அ) திருக்குறள் ஆ) மணிமேகலை

இ) நன்னூல் ஈ) சிலப்பதிகாரம்

25. 75 ஆவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா

அ) வெள்ளிவிழா ☐ ஆ) வைரவிழா ☐

இ) பவளவிழா ☐ ஈ) பொன்விழா ☐

26. கார்காலத்துக்குரிய மாதங்கள்

அ) ஐப்பசி, கார்த்திகை ☐ ஆ) ஆவணி,புரட்டாதி ☐

இ) ஆனி,ஆடி ☐ ஈ) சித்திரை,வைகாசி ☐

27. நின்றனர் என்பதன் பகுதி

அ) ன் ☐ ஆ) அர் ☐

இ) நில் ☐ ஈ) ற் ☐

28. வெம்மை என்பதன் எதிர்ச்சொல்

அ) மறுமை ☐ ஆ) தண்மை ☐

இ) செயற்கை ☐ ஈ) இயற்கை ☐

29. ''இந்த மண் எங்களின் சொந்தமண்'' என்ற பாடலின் ஆசிரியர்

அ) மகாகவி உருத்திரமூர்த்தி ☐ ஆ) புதுவை இரத்தினதுரை ☐

இ) தாமரைக்கண்ணன் ☐ ஈ) மன்னார் அமுதன் ☐

TEDC

30. பேராசை மக்களை இழிந்தநிலைக்குக் கொண்டு சென்றுவிடும். இங்கு வந்துள்ள செயப்படுபொருள்

அ) இழிந்தநிலைக்கு ☐ ஆ) மக்களை ☐

இ) பேராசை ☐ ஈ) சென்றுவிடும் ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

இன்று இலங்கைத் தீவில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார, நெருக்கடியால் அந்நாட்டு மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்குகின்றனர். ஆனால் இத்தகைய பெரும் நெருக்கடிக்கு மத்தியிலும் சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழர் பகுதிகளில் பௌத்த விகாரைகளைக் கட்டுவதிலும் வாழையடி வாழையாக தமிழர் வாழ்ந்த நிலப்பரப்புகளை ஆக்கிரமிப்பதிலும் மேலும் தமிழரது நிலப்பரப்புகளில் தமிழர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றி சிங்களக் குடியேற்றங்களை விரிவுபடுத்துவதிலும் முனைப்புக் காட்டுகின்றது. வடக்குக் கிழக்குத் தமிழர்களின் பலம் என்பது தாயக நிலத்தில் குடியிருக்கும் தமிழ் மக்களின் இருப்பிலேயே தங்கியுள்ளது. எனவே தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்குவதும் அவர்களது இனப்பரம்பல் செறிவைக் குறைப்பதும் சிங்கள அரசுகளின் குறிக்கோளாகும். இதனை அடிப்படையாகக் கொண்டே பௌத்தவிகாரைகளை தமிழ் மண்ணில் உருவாக்கி அவற்றைப் பராமரிக்கவென சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதன் மூலம் தமிழர் நிலங்களை வன்கவர் செய்யும் செயல் மறைமுகமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. நாடு அழிவின் விளிம்பில் இருக்கின்ற போதிலும் தமிழ்மக்களை அழிப்பதில் சிங்கள அரசுகள் குறியாக இருக்கின்றன என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது. இவ்வாறான ஆக்கிரமிப்பிலிருந்து நாம் எவ்வாறு எமது இனத்தையும் நிலத்தையும் வரலாற்று அடையாளங்களையும் தற்காத்துக் கொள்ளப் போகின்றோம். அழிவின் விளிம்பில் நிற்கும் ஈழத்தமிழினம் உயிர்வாழ, நாம் ஒன்று திரண்ட சக்தியையும் ஒற்றுமையையும் காட்டித் தொன்மையும் செழுமையும் மிக்க தமிழீழத் தேசிய இனத்தைக் காக்க வேண்டியது உலகெங்கும் வாழும் தமிழரது உயரிய கடமையாகும்.

TEDC

1. வடக்குக்கிழக்குத் தமிழர்களின் பலம் என்பது எதில் தங்கியுள்ளது?

2. உலகெங்கும் வாழும் தமிழரது உயரிய கடமை எது?

3. சிங்கள அரசுகளின் குறிக்கோள் யாது?

4. இலங்கை மக்கள் எதனால் பட்டினிச்சாவை எதிர்நோக்குகின்றனர்?

5. இப்பந்தியில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

புள்ளிகள் 10

TEDC

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. இராசராசசோழனின் தமிழ்ப்பெயரைத் தருக.

2. ஆரியரின் எப்பாகுபாடு குமுகப் பிரிவுகளை ஏற்படுத்தியது?

3. வள்ளுவன் வழியிலே ஆரியச் சதியினைச் சாடிய கவிஞன் யார்?

4. கரிகாற்பெருவளத்தானுடன் வெண்ணிப்பறந்தலை என்னும் இடத்தில் போரிட்ட சேர மன்னன் யார்?

5. தென்றல் வரவு பற்றிக் கூறும் கழகநூல் இரண்டின் பெயர்களைத் தருக.

6. வெந்ததே சிந்தை என்ற கவிதையில் குறிப்பிடப்படும் இனவழிப்புச் செயல் எது?

7. பழந்தமிழர் முதற்பொருளாக எவற்றைக் கொண்டனர்?

புள்ளிகள் 10

TEDC

4) **பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக. அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

1.



2. **தாய் மொழியை மறந்திடா**
**தமிழராய் நாம் வாழ்வோம்.**

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 10

TEDC

**5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.**

ஆகா! என்னே! அழகு இவ் வயல். இங்கு முற்றிய நெற்கதிர்கள் கமகம என நறுமணத்தைப் பரப்பிக் கொண்டிருக்கின்றன. வயலினூடே தங்குதடை இன்றி வீசிய காற்று உடலுக்குப் புத்துணர்வைத் தருகின்றது. காற்றிலே அசைந்த நெற்கதிர்கள் சரசர என ஒலி எழுப்புகின்றன. அவ்வொலி கேட்டு வரம்பில் அமர்ந்திருந்த கொக்கு சிறகடித்துப் பறந்து சென்றது. அவ்வயலில் உழவர்கள் இரவுபகல் பாராது வேலை செய்து கொண்டிருக்கின்றனர். இந்தக் கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாது கோரைப்புற்களைப் பிடுங்கிக் களைத்த உழத்தி ஒரு சதுரக்கல்லில் இருந்து களைப்பாறுகின்றாள். இக்காட்சியைக் கண்டதும், உழவர்களது கடின உழைப்பினால்தான் நாம் உயிர்வாழ்கின்றோம் என்பதை என் மனம் உணர்ந்து கொண்டது.

1. இணைமொழி ஒன்று தருக.

_______________________________________________

2. வன்றொடர்க்குற்றியலுகரத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

_______________________________________________

3. பெயரெச்சம் ஒன்று தருக.

_______________________________________________

4. இங்கு வந்துள்ள பண்புத்தொகை எது?

_______________________________________________

5. இருபெயரொட்டுப் பண்புப் தொகையைக் கண்டறிந்து எழுதுக.

_______________________________________________

6. இரவுபகல் என்பது எவ்வகைத் தொகை?

_______________________________________________

TEDC

7. இரட்டைக்கிளவிக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

______________________________________________

8. "ஏ" இடைச்சொல் இடம்பெற்ற சொல் எது?

______________________________________________

9. இறந்தகால வினையெச்சம் ஒன்று தருக.

______________________________________________

10. அகச்சுட்டுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________________________

புள்ளிகள் 10

**ஆ) 1. தரப்பட்டுள்ள வினையடிகளைப் பொருத்தமாக மாற்றி எழுதுக.**

| வினையடி | பெயரெச்சம் | வினையெச்சம் | எதிர்மறைப்பெயரெச்சம் |
|---|---|---|---|
| படர் | | | |
| கட்டு | | | |

புள்ளிகள் 03

**2. தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதுக.**

தென்னைமரம் வரியழியம் தமிழினம்
பனையோலை மெய்யெழுத்து பலாச்சுளை

| உயிர்முன்உயிர் | உயிர்முன்மெய் | மெய்முன்உயிர் |
|---|---|---|
| | | |
| | | |

புள்ளிகள் 02

TEDC

**6) தரப்பட்டுள்ள சொற்குவியலில் இருந்து கருத்துக்குப் பொருத்தமான பழமொழிகளைக் கண்டறிந்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| மூன்று | தான் | போடு | சுடும் |
| போட்டாலும் | சிரிக்குமாம் | கால் | முயற்சியுடையார் |
| பிடித்த | காவோலை | தன்னைச் | முயலுக்கு |
| ஆற்றில் | அளந்து | குருத்தோலை | விழக் |
| | தன்வினை | இகழ்ச்சியடையார் | |

1. வினை விடாது.

____________________

2. முயற்சியின் பயன்.

____________________

3. எல்லோருக்கும் முதுமை வரும்.

____________________

4. விடாப்பிடியாய் நிற்றல்.

____________________

5. எந்தச் செயலையும் அளவறிந்து செய்.

____________________

புள்ளிகள் 05

TEDC

**7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

தமிழர் உலகின் முதன் மாந்தர் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தமிழர்களே முதலில் மொழியைப் படைத்தனர். எனவே உலகின் முதன் மொழி தமிழாயிற்று. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இருந்து புலம்பெயர்ந்து தென்னாபிரிக்கா, மொறிசியசு போன்ற நாடுகளில் வாழும் தமிழர் தமிழைக் கற்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். புலம்பெயர்ந்து பல நாடுகளில் வாழும் தமிழ்ச்சிறார்கள் தமிழை க்கற்று தமிழ்மொழியில் சிறந்து விளங்குகின்றனர்.

புள்ளிகள் 5

TEDC

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ஆரியம் ஊடுருவலால் தமிழரின் அரசியல், மொழி, வழக்காறுகள் என்பவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

- தேவையில் எழுந்த காலத்தின் கவிதைகள்

- தொழிலாளர் நாள்

- உந்துகளைப் பயன்படுத்துவதனால் ஏற்படுகின்ற நன்மைகளும் தீமைகளும்

புள்ளிகள் 15

TEDC